<u>செய்தி வெளியீடு</u>

சென்னை மாநகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதில் ஆந்திராவிலிருந்து பெறப்படும் கிருஷ்ணா குடிநீர் திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற தண்ணீர் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் மூலம் சென்னை மாநகருக்கு ஆண்டொன்றுக்கு 12 டி.எம்.சி. தண்ணீர் பெறப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஜுலை, 2014 முதல் அக்டோபர் வரையிலான காலத்திற்கு 8 டி.எம்.சி. தண்ணீரும், ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டி.எம்.சி. தண்ணீரும் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டும். ஆனால், இந்த ஆண்டு ஜனவரி முதல் 20.3.2015 வரை 1.738 டி.எம்.சி. அளவுக்கு மட்டுமே தண்ணீர் பெறப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஐந்தாவது முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு வழிவகை ஏற்பட்ட உடன் ஆந்திர பிரதேச முதலமைச்சர் திரு. என். சந்திரபாபு நாயுடு அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்த போது சென்னை மாநகரின் குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு ஆந்திர மாநிலத்திலுள்ள கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 23.5.2015

அன்று முதலமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டதையொட்டி ஆந்திர முதலமைச்சர் திரு. என்.சந்திரபாபு நாயுடு அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை **24.5.2015** அன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்த போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்காக ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இந்த வேண்டுகோளின் காரணமாக, **1.6.2015** அன்று மாலை ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து வினாடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் தமிழக எல்லையில் ஊத்துக்கோட்டை அருகே தாமரைக்குப்பம் ஜீரோ பாயிண்டிற்கு **4.6.2015** அன்று வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு - ஆந்திரா மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தின்படி ஜுன் மாதம் தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டியதில்லை என்ற போதும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முயற்சியின் காரணமாக தற்பொழுது தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9